


## உலக அதிசயம்

உலக அதிசயங்களின் வரிசையிலே
உன்னையும் சேர்த்திடவா – நீ
எழுதத் தூண்டிடும் அழகு தேவதை
இளமை ராணியாய் பழகும் மாதுளை!

கவிஞனாக எனை மாற்றிவிட்டவள்
காதல் நெஞ்சினை தூது தந்தவள்
இளைய ஞாயிறாய் ஒளிர்ந்து நிற்கின்றேன்
தழுவும் பூங்கொடி தயக்கம் ஏனடி?